# 8C உருக்காட்டல், கலந்துரையாடல் மற்றும் ஆழமான பகுப்பாய்வு

1. தயவு செய்து மீண்டுமொரு முறை ஒருங்கிணைவு மொழி விருத்தி பற்றிய முழு (சவால்!) இயலையும் மீள்பார்வை செய்து உங்கள் கண்ணோட்டத்திலிருந்து 3 அல்லது 4 இன்றியமையாத கூறுகளை அல்லது அக நோக்கினைக் குறித்துக்கொள்ளுங்கள். இயலுமாயின் இக் கூறுகளை தொழில் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

2. அத்தியாயம் 8B.1 இல் ஆஸ்திரியாவின் இரு சிறுவர்களால் வரைந்த "மொழி புறக்கோடுகள்" வரைவ-ினை நீங்கள் காண்கிறீர்கள். உங்கள் வகுப்புக்களில் இது போன்ற மொழி புறக்கோடுகள் வரைபுகளை வரைந்து அவற்றை மாணவர்களுடன் கலந்துரையாடுக.

3. "மொழியியல் தகைமையின் கள அளவு" பகுதி இயல் 8A2 ஐ மீண்டுமொருமுறை மீள்பார்வை செய்க. எல்லா நான்கு தகைமைகளுக்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டைக் கண்டறிக (எ.டு. பொருத்தமான தகைமையை வேண்டி நிற்கும் வகுப்பறைச் சூழ்நிலை)

4. ஆ.அ.த.தி மற்றும் அ.க.மொ.தி பற்றி நீங்கள் கற்றதை மீண்டும் ஒருமுறை சுருக்கிக் கூறுக. முறையே ஆ.அ.த.தி மற்றும் அகமொதிக்குப் பொருத்தமான 2-3 சூழ்நிலைகளைக் கண்டறிந்து கலந்துரையாடுக.

5. தயவு செய்து விளக்கப்படத்தின் காற்பகுதிகளைக் கொண்டு மீண்டுமொருமுறை மீள் பார்வை செய்க. ஒவ்வொரு காற் பகுதிகளுக்குமான உங்களது தன் கற்பித்தல் பட்டறிவிலிருந்து 1-2 குறிப்பிட்ட சூழ்நிலைகள் அல்லது கற்றல் காரணங்களைக் கண்டறிக.

6. இயல் 8A5a இல் விளக்கப்பட்ட பக்கத்துணை பணியுடனான (சார்புக்கட்டு) நடைமுறையானது நடப்பிலிருப்பதும் இன்றியமையாததுமாகும். குறிப்பாக இவ் இலக்கு அணுகுமுறையை நீங்கள் பின்பற்றும் உங்களது தன் கற்பித்தல் பட்டறிவிலிருந்து குறிப்பாக 2-3 நிகழ்வுகள் பற்றி எண்ணிக் கலந்துரையாடுக! அடுத்த சில கிழமைகளில் நடைமுறைப்படுத்தக்கூடிய சிறியதொரு திட்டத்தைத் தீட்டுவது உகந்ததாகும். உங்கள் பட்டறிவுகளை தொழில்சார் தோழருடன் பரிமாறிக்கொள்க.

7. இயல் 8A5b இல் (சொற்களைக் கற்றல்) சுவிற்சர்லாந்தில் ஒரு தொடர் கல்வி நிகழ்விலிருந்து ஓர் ஒப்படையைக் கண்டுபிடிப்பீர்கள். உங்கள் வகுப்புகளில் தற்போது வேண்டப்படுகின்ற தலைப்புடன் தொடர்புடையதாய் அதே ஒப்படையைப் பயன்படுத்துக. வெவ்வேறு மட்டங்களுக்காக 2 அல்லது 3 சொற் பட்டியலை ஆக்குக. செய்வினைச் சொற்களாக நீங்கள் ஒதுக்கியவற்றை சிவப்பு நிறத்தாலும் செயப்பாட்டு வினைச்சொற்களை நீல நிறத்தாலும் அடையாளப்படுத்துக.

8. இயல் 8B.3 இல் திட்டமிடல் எடுத்துக்காட்டுகளை மீள் பார்வை செய்க. குறிப்பாக எது உங்களுக்குப் பயனுடையதாகவும் சிறந்து விளங்குகிறதாகவும் அமைகிறது என்பதையும் எது உங்களுக்குப் பெரிதும் பிடிக்கவில்லை ஏன்? எனபதையும் எண்ணிக் கலந்துரையாடுக